16.2.2021
அசல் வழக்கு எண்:159-2016

பிவா.சா.1 வாலகுருநாதன் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை

தாவா சொத்தான சர்வே எண்.248/4ன் பழைய சர்வே எண்.530சி என்றால் சரிதான். பழைய சர்வே எண்.530சி என்பது சர்வே எண்.248/3, 248/4 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் தாவா கிராமத்தில் தற்போது இல்லை. எனக்கு பாத்தியமான சர்வே எண்.248/6ல் கட்டுப்பட்டிருந்தது. சர்வே எண்.248/6ல் கண்ட சொத்து எனக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து. சர்வே எண்.248/6ல் கண்ட சொத்து தாவா சொத்திற்கு கிழக்கேயும், சர்வே எண்.248/5க்கு கிழக்கேயும் அமைந்துள்ளது. சர்வே எண்.248/5 யாருக்கு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. சர்வே எண்.248/5ல் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை. சர்வே எண்.248/6ல் மேற்கே திருவேங்கடத்தேவர் நிலம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.248/5ல் கண்ட சொத்தை நான் யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை. சர்வே எண்.248/5ல் கண்ட சொத்தை எனது மூதாதையர்கள் கிரையம் கொடுத்துள்ளனரா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு நாகம்மாள் பெயரில் பட்டா ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து நாகம்மாளிற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனது எதிர் வழக்குரையிலோ, நிரூபணவாக்கு மூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோள்படி மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).